# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


# ஆண்டவரின் அன்பை பார்வையாளர்களுக்கு தத்ரூபமாக கொண்டுவந்த ஒரு நேரடி நிகழ்ச்சி !

## ஈஸ்டர் இசைநிகழ்ச்சி “உயிர்த்தெழுதல்”



ஈஸ்டர் கலைநிகழ்ச்சியான “உயிர்த்தெழுதல்” தலைமை ஆலயத்தில் உள்ள மேடையில் காண்பிக்கப்பட்டது. அது ஆண்டவருடைய அன்பை பார்வையாளர்கள் தங்களது இதயத்தில் பதித்து வைக்க ஒரு வாய்ப்பை தந்தது. கலைநிகழ்ச்சியானது ஒரு நேரடியான இசை நிகழ்ச்சியாக திட்டமிடல், நிர்வாகம், நடிப்பு, இசை, நடனம் மற்றும் ஆடை அலங்காரம் உள்ளிட்ட துறைகளில் திருச்சபை அங்கத்தினர்களால் நடத்தப்பட்டது.

2016 மார்ச் 25ல், ஈஸ்டர் கலைநிகழ்ச்சியானது மான்மின் மத்திய திருச்சபையின் தலைமை ஆலயத்தில் விசேஷித்த மேடையில் காண்பிக்கப்பட்டது. இந்த கலைநிகழ்ச்சியானது கலைக்குழுவினரால் நிகழ்த்தப்பட்டு, GCN TV மூலமாக ஒளிபரப்பப்பட்டது (www.gcntv.org). அது ஒரு இசை மேடை நிகழ்ச்சியாக நேரடியாக நிகழ்த்தப்பட்டது. பார்வையாளர்கள் இயேசுவினுடைய ஊழியங்கள் மற்றும் பாடுகளின் மத்தியில் இருந்ததைப் போல உணர்ந்தார்கள்.

இந்த இசைநிகழ்ச்சிக்கு 360க்கும் மேற்பட்டவர்கள் அர்ப்பணித்திருந்தார்கள். வெளியாட்களான தொழில்நுட்ப நிபுணர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் திருச்சபை அங்கத்தினர்கள் ஆவர்; அவர்கள் கலைக்குழுவைச் சார்ந்த இம்மானுவேல் பாடகர்கள் குழு, நிசி இசைக்குழு, ஒருங்கிணைந்த துதி குழு மற்றும் ஹலேலூயா இசைக் குழுவைச் சார்ந்தவர்கள்.

இந்த இசைநிகழ்ச்சி மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது. “உயிர்த்தெழுதலின் நிரூபணம்” என்ற முதல் பகுதியில், ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்ட பிறகு அச்சத்தோடு இருந்த சீஷர்களின் மத்தியில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் தோன்றுவது, பேதுருவும் மகதலேனா மரியாளும் ஆண்டவரை நினைவுகூர்ந்து அவருடைய உயிர்த்தெழுதலை பறைசாற்றுவதும் காண்பிக்கப்பட்டன.

“ஆண்டவருடைய பாதை” என்ற இரண்டாவது பகுதியில், இயேசு ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும், அவர் அநேக வல்லமையான கிரியைகளை வெளிப்படுத்துவதும் காண்பிக்கப்பட்டன. அந்தக் காட்சி மகிழ்ச்சியான பாடல் மற்றும் நடனத்தோடு நிகழ்த்தப்பட்டது. மேலும், அவர் கைது செய்யப்பட்ட இரவில் கெத்சமனே என்ற இடத்தில் அவர் ஜெபித்தது, டொலோரொசா பாதையில் அவருடைய பாடுகளின் காட்சிகள் மேடையில் காண்பிக்கப்பட்டன.

“உயிர்த்தெழுதலின் நம்பிக்கை” என்ற மூன்றாவது பகுதியானது ஆண்டவரின் உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் அவர் சீஷர்களைப் பலப்படுத்தினது காட்சியாக காண்பிக்கப்பட்டன. அந்த நிகழ்ச்சியில் பார்வையாளர்களின் இருதயங்களை அதிகமாக அசைத்தது என்னவென்றால் “உயிர்த்தெழுதல் 2,” “பேதுருவின் அறிக்கை,” மற்றும் “ஆண்டவரின் ஊழியம்” போன்றவை அடங்கிய புதியதாக அறிமுகம் செய்யப்பட்ட 6 ‘மான்மின் துதி’ பாடல்கள்தான்.

இந்த கலைநிகழ்ச்சிக்கு முன்னதாக, தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் “சிலுவை” என்ற தலைப்பில் கலாத்தியர் 3:13ன் அடிப்படையில் பிரசங்கத்தைக் கொடுத்தார். அவர், ‘சாபத்திற்கு’ அடையாளமான சிலுவை இயேசுவின் மூலம் ‘ஆசீர்வாதமாக’ அர்த்தம் மாறியதையும், சிலுவையில் பதிக்கப்பட்டுள்ள தியாகம் மற்றும் அன்பையும் குறித்துச் சொன்னார்.

கூடுதலாக, ஆண்டவர் சிலுவையில் கடைசி நொடி மட்டும் கொடிய வேதனையை அனுபவித்ததை அங்கத்தினர்கள் உணர்ந்தால், தேவ வார்த்தையின்படி அவர்கள் வாழ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்தப் பிரசங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளின் மூலம் பார்வையாளர்கள் தேவன் தங்களுக்குக் கொடுத்த அன்பு எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்துக் கொண்டனர். மேலும், அவர்கள் இரட்சிப்பின் மகிழ்ச்சியினாலும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கையினாலும் நிரப்பப்பட்டார்கள்.



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# வேதாகமத்தின் ஆக்கியோனாகிய தேவன்

“வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” (1தீமோத்தேயு 3:16–17).

வேதாகமம், ஏன் தேவன் மனிதர்களை சிருஷ்டித்தார், எப்படி அவர் மானுட வரலாற்று சரித்திரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார், மனித வேளாண்மையின் (விதைப்பும், வளர்ப்பும், அறுப்பும்) துவக்கம் மற்றும் முடிவு, இரட்சகராகிய இயேசு, உதவியாளரான பரிசுத்த ஆவி, பரலோகம் மற்றும் நரகம், மனிதர்களுடைய கடமை ஆகியவை பற்றி நமக்குச் சொல்கிறது. அப்படியானால், வேதாகமத்தை எழுதியது யார்?

## 1. தேவன், வேதாகமத்தின் ஆக்கியோன்

வேதாகமம் 66 புத்தகங்களை கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்கள் மற்றும் புதிய ஏற்பாட்டில் 27. முப்பத்தி நான்கு பேர், பழைய ஏற்பாட்டிலிருந்து 26 பேர் மற்றும் புதிய ஏற்பாட்டில் இருந்து 8 பேர் வேதாகமத்தை எழுதியதாக அறியப்பட்டுள்ளது. அது 1,600 ஆண்டுகளாக எழுதப்பட்டுள்ளது : பழைய ஏற்பாட்டின் காலங்களில் 1500 ஆண்டுகளும், புதிய ஏற்பாட்டின் யுகத்தின் 100 ஆண்டுகளும், 30க்கும் அதிகமான வித்தியாசமான மக்கள் வேதாகமத்தை பதிவு செய்திருந்தாலும், அவர்களில் ஒருவரும் அதன் “ஆக்கியோன்” அல்ல. ஒருவர் அவர்கள் அனைவரும் ஆவியின் எழுத்தாளர்கள் எனக் கூறலாம்.

ஒரு தாயானவளுக்கு 2 குமாரர் இருக்கிறார்கள் என வைத்துக் கொள்வோம். அவள் தனது இளையக் குமாரனுக்கு ஒரு கடிதம் எழுத விரும்புகிறாள். அவள் தனது மூத்த குமாரனை வைத்து தான் தன் இளைய குமாரனிடம் சொல்ல விரும்புகிற யாவற்றையும் ஒரு கடிதத்தில் எழுத வைக்கிறாள். அக்கடிதத்தை மூத்த குமாரன் “எழுதி” இருந்தாலும்கூட, அந்தக் கடிதம் தாயினிடத்திலிருந்து வந்ததே. அதே போலவே, தேவன் 34 தனிநபர்களை அழைத்து பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டில் வேதாகமத்தை பதிவு செய்வதற்கு அவர்களை வழிநடத்தினார். ஆக, வேதாகமத்தின் ஆக்கியோன் தேவன் ஆவார். 2 பேதுரு 1:21, “தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்” என்று நமக்கு நினைப்பூட்டுகிறது. ஏசாயா 34:16ல், “கர்த்தருடைய புஸ்கத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்” என்றும் வாசிக்கிறோம்.

பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டில் சர்வ வல்லமையுள்ள தேவன் வேதாகமத்தைப் பதிவு செய்திருப்பதால், வேதாகமம் முன்னுக்குப் பின் முரணானது அல்ல. ஆனால் அது முழுவதும் பல மனிதர்களால் எழுதப்பட்டிருந்தாலும்கூட தொடர்ச்சியாக சீரானதாக உள்ளது.

## 2. பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டில் பதிவு செய்யப்பட்ட வேதாகமம்

வேதாகமம் பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டில் பதிவு செய்யப்பட்டதால், அது பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டினால் தானே வியாக்கியானம் செய்யப்பட வேண்டும். மனிதர்களுடைய எண்ணங்களினால் வேதாகமத்தை வியாக்கியானம் செய்ய முற்படுவது மக்களை அழிவின் பாதைக்கு வழிநடத்திவிடும். காரணம், அப்பேர்பட்ட வியாக்கியானங்கள் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புடையதாய் இராது (2 பேதுரு 3:16).

அது பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டில் வியாக்கியானம் செய்யப்படும்போது, எப்படியாயினும், வேதாகமத்தில் எந்த ஒரு வசனமும் ஜோடில்லாதிராது என்று நாம் கற்றிருக்கிறோம் (ஏசாயா 34:16). கழுத்தில் அணியும் அட்டிகை ஒன்றை உருவாக்க முத்துக்களை விட அதிக நேரம் எடுக்கிறதோ, அதுபோல வேத வசனத்தின் ஆவிக்குரிய முக்கியத்துவம் ஒன்றோடு ஒன்று ஒத்திருக்கக்கூடிய அதன் ஜோடியானதை அவர்கள் கண்டறியும்போது விளக்கப்பட முடியும்.

நிகழ்வாக, அப்போஸ்தலர் 2:21, “அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்” என்று நமக்குச் சொல்கிறது. இரட்சிப்பிலே தேவனுடைய சித்தம் இருப்பினும், இந்த வசனத்தை மட்டும் வைத்து போதிய அளவு விளக்கிவிட முடியாது. மத்தேயு 7:21ல் நம்முடைய ஆண்டவர் நமக்குச் சொல்வதுபோல, “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.” ஆண்டவருடைய நாமத்தை அழைப்பது மட்டுமே இரட்சிப்பைப் பெறுவதற்கான நிபந்தனையை சந்தித்துவிட முடியாது.

ரோமர் 10:10ல், நாம் நினைப்பூட்டப்படுவதுபோல, “நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.” இருதயத்தில் விசுவாசித்து நீதியை அடைபவர்கள் மட்டுமே தங்கள் உதடுகளினால் இரட்சகரை அறிக்கைச் செய்யும்போது இரட்சிப்பைப் பெறமுடியும். அப்படியானால் ஒரு நபர் “இருதயத்தில் விசுவாசிப்பது” என்றால் என்ன?

யாக்கோபு 2:14, “என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? என்று நம்மிடம் கேட்கிறது. ஒரு நபர் இருதயத்தில் விசுவாசித்து, அது நீதியில் முடிவடைந்தால், அவன் தனது பாவங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பாடுபட்டு முயற்சித்து, தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதை நாம் பார்க்க முடியும்.

மேலும் ரோமர் 3:28ல், “ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.” நீங்கள் சத்தியத்தை ஊக்கமாக உங்கள் கிரியைகளில் கைக்கொள்வது போல காணப்பட்டாலும் விசுவாசமில்லாமல் உங்கள் கிரியைகள் பூரணமாகாது. “இருதயத்தில் விசுவாசிப்பது” என்பது பரிசுத்த நடக்கையில் முடியும் தூய இருதயத்தை அடையப்பெறுதல் அல்லது வேறு வார்த்தையில் இருதய விருத்த சேதனத்தை அடையப்பெறுதல் என்பதாகும்.

இரட்சிப்பு என்பது இருதயத்தில் விசுவாசிக்கும் போது தங்கள் இருதயத்தை விருத்தசேதனம் செய்து, தேவனுடைய வார்த்தையில் வாழ்ந்து, தங்கள் உதடுகளினால் ஆண்டவரின் நாமத்தை அறிக்கை செய்யும் விசுவாசிகளுக்கு மட்டுமே.

இப்பேர்பட்ட வேதவசனங்களில் ஜோடிகளை தேடாமல், மக்கள் சத்தியத்தைத் தவறாக கற்றுக்கொண்டு, “இயேசுதான் தனது இரட்சகர் என்று அறிக்கை செய்யும் யாருக்கென்றாலும் இரட்சிப்பு உள்ளது” அல்லது “நீ விசுவாசிக்கும் மட்டும், நீ பாவத்தில் வாழ்ந்துக் கொண்டிருந்தாலும் இரட்சிப்பை நீ பெற முடியும்” என்று அதை பிடிவாதமாகச் சொல்வார்கள். இப்பேர்பட்ட தவறான புரிந்துக் கொள்ளுதல் மக்களை பாவத்திற்கு நேராக வழிநடத்தி, இறுதியாக அழிவுக்கு கொண்டுச் சென்றுவிடும். வேதாகமத்தில் புதைந்துள்ள தேவனுடைய சித்தத்தை சரியாக புரிந்துக்கொள்வதற்கு, நீங்கள் அவைகளின் ஜோடிகளை கண்டுபிடித்து, அவைகளை பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டில் வியாக்கியானம் செய்ய வேண்டும்.

## 3. தேவனுடைய வார்த்தை நித்திய சத்தியம்

வேதாகமம் தேவனுடைய வார்த்தை. அதில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்தும் சத்தியம். இஸ்ரவேலின் சரித்திரம், அதின் அண்டை தேசம் மற்றும் ஜனத்தின் நிகழ்வுகள், இடம் மற்றும் மக்களின் பெயர்கள், பழக்கங்கள் போன்ற சரித்திர சான்றுகள், பழைய ஏற்பாட்டில் நாம் காணும் அனைத்தும் வேதாகமத்தின் சத்தியத்திற்கு உத்தரவாதமளிக்கின்றன.


வேதாகமம் பல வகையான தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது. எழுதப்பட்டுள்ளபடியே அவைகள் அனைத்தும் நிறைவேறியுள்ளன. உதாரண நிகழ்வாக, லூக்கா 19:43–44 எருசலேமின் வீழ்ச்சியை தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளது. “உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,... உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும்...” நாற்பது ஆண்டுகளுக்குப் பிற்பாடு கி.பி. 70ல் அது நிறைவேறியது.

பழைய ஏற்பாடு முழுவதும், இயேசுவின் பிறப்பு, ஊழியம், சிலுவைப்பாடு மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து தேவனுடைய தீர்க்கத்தரிசனங்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை எப்படி இயேசு நிறைவேற்றினார் என்ற சம்பவங்களும் பதிவுகளும் புதிய ஏற்பாட்டில் நிறைந்துள்ளன. இயேசுவின் பிறப்பிலே, ஆதியாகமம் 3:15ல் தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இரட்சகர் பிறப்பார் என்று முன்னறிவித்தார். தேவன் சர்ப்பத்தைச் சபிக்கும்போது, “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.” இரட்சகர் ஸ்திரீயின் வித்தாக வந்து மரணத்தை மேற்கொள்வார் என்று அந்தத் தீர்க்கதரிசனம் உரைத்துள்ளது. இங்கு, “ஸ்திரீ” என்பது ஆவிக்குரிய ரீதியில் இஸ்ரவேலைக் குறிக்கிறது. இயேசு யூதா கோத்திரத்தின் யோசேப்புக் குடும்பத்தில் பிறந்தார் (லூக்கா 1:26–33).

ஏசாயா 7:14ல், “இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்” என்று நமக்குச் சொல்கிறது. அதே வேளையில் மீகா 5:2, “எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது” என்று வாசிக்கிறோம். இந்த தீர்க்கதரிசனங்களின்படி இயேசு வானவர் பரிசுத்த ஆவியினால் உற்பவிக்கப்பட்டு பெத்லகேமில் ஒரு சத்திரத்தின் மாட்டுத் தொழுவத்தில் கன்னிமரியாளிடத்தில் பிறந்தார்.

இயேசு எருசலேமில் நுழைந்த போது சகரியா 9:9ல் முன்னுரைக்கப்பட்டபடி அவர், “கழுதையின் மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும்” ஏறிவந்தார். கூடுதலாக சங்கீதம் 41:9ல் முன்னறிவித்தபடி, இயேசு யூதாஸ்காரியோத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டு விற்கப்பட்டார். மேலும் இயேசுவின் சிலுவைப்பாடு, அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலைக் குறித்து ஏசாயா, சங்கீதம் மற்றும் சகரியா உட்பட பழைய ஏற்பாடு முழுவதும் பல புத்தகங்களில் எண்ணற்ற விரிவான தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவைகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டின் காலங்களில் நிறைவேறின.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நிச்சயமாக நீங்கள் விசுவாசித்து, அதில் எழுதப்பட்டுள்ள கட்டளைகளிலே நடக்கும்படி உங்களை நான் ஊக்கப்படுத்துகிறேன். இப்படிச் செய்வதால் நீங்கள் எப்போதும் ஜீவனுள்ள தேவனைச் சந்தித்து அவரிடமிருந்து ஆசீர்வாதங்கள் பெற்று, அவருடைய மெய்யான பிள்ளைகளாக சதாகாலமும் அவரோடு நீங்கள் அன்பைப் பகிரவும், ஆண்டவரின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன்.




### விசுவாசத்தின் அறிக்கை

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# வேதாகம அற்புதங்கள் இன்றும் இன்னமும் நடைபெறுகிறது

"கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர்" (எண்ணாகமம் 6:24-26). தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு நற்காரியங்களை மட்டுமே கொடுக்க விரும்புகிறார். கொரியாவிற்கு உள்ளும் புறமும் இருந்து சில சாட்சிகள் இங்கே.

## "நான் அவருடன் கைகுலுக்கிய பிற்பாடு ஒரு பக்கவாதத்திலிருந்து சுகமானேன்"

*சகோதரர் ஜோஹோன் எட்வார்டு மாமுசங், வயது 66, இந்தோனேசியா*




2013 ஜனவரியில், ஒரு காலையில், நான் எனது இடது கையை அசைக்கமுடியாததை கண்டேன். காலம் சற்றுச் செல்ல என்னால் எனது இடது காலை கூட அசைக்கமுடியாமல் போயிற்று. நான் மருத்துவமனைக்குச் சென்றேன். அவர்கள் எனக்குப் பக்கவாதத்தால் இடது பக்கத்தில் முடக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னார்கள். நான் சிகிச்சைக்காக மருத்துவமனையில் மூன்று வாரங்களாக இருந்தேன். அதன்பிற்பாடு வெளியே வந்து மருந்துகளை எடுத்துக்கொண்டு, உடல் சிகிச்சையை பெற்றேன். இருப்பினும், என்னால் இன்னமும் எனது இடது கையை அசைக்க முடியாமலேயே இருந்தது. எனது நடையும்கூட பார்க்க இயல்பானதாக இல்லை. மாடி படிக்கட்டுகள் ஏறும்போது எனக்கு சுவாச கஷ்டம் ஏற்பட்டது.

ஆகஸ்டு 2015ல், தென்கொரியாவில் வசித்து வந்த எனது மகளைப் பார்க்க நானும் எனது மனைவியும் வந்தோம். எனது மருமகன் மான்மின் மத்திய திருச்சபையில் பங்கு பெற்று வந்தார். அவரும் எனது மகளும் மான்மின் கோடை ஏகாந்தத்திற்கு எங்களை அழைத்தார்கள். ஏகாந்தத்தின்போது, எதிர்பாராத விதமாக மார்பக கட்டி அறுவை சிகிச்சைக்குப் பிற்பாடு இருந்துவந்த வேதனையிலிருந்து எனது மனைவி சுகமானாள். அவளது அனுபவத்தைக் கண்ட நான், எனது நோயிலிருந்து சுகம் பெறுவதற்காக தேவனுக்கு முன்பாக ஏக்கம்கொள்ளலானேன்.

ஜனவரி 2016ல், எனது மனைவியும் நானும் மீண்டுமாக கொரியாவிற்கு வந்தோம். தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்கள் தனது ஜெபமலையிலிருந்து திருச்சபை அங்கத்தினர்களை சந்தித்து அவர்களோடு நேரம் கொடுக்க சபைக்கு வருகிறார் என்ற சந்தோஷமான செய்தியை நான் கேட்டேன். கூட்டத்திற்கு முன்பாக ஒரு வாரத்திற்கு நான் மான்மின் ஜெபமையத்தின் தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் பங்கு பெற்று, விசுவாசத்துடன் சுகத்தைப் பெறுவதற்கு ஊக்கமாக ஜெபித்து என்னை நான் ஆயத்தப்படுத்தினேன்.

அந்த நாள் வந்தது. பிப்ரவரி 7 அன்று, நான் அவரைச் சந்திக்கச் சென்று அவரது பிரசங்கத்தைக் கவனித்துக் கேட்டேன். அவர் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையின்படி நாம் வாழ்ந்தால் நம்மால் சமாதானமாகவும், ஆசீர்வாதமுமாக வாழமுடியும்; வறுமை, வியாதி மற்றும் பேரழிவுகளிடம் சம்பந்தமற்றவர்களாக இருக்கமுடியும் எனக் கூறினார். நான் அதிகமான கிருபையைப் பெற்றேன். நான் அவரது ஜெபத்தைப் பெற்று, அறிவர். லீ அவர்களுடன் கைகுலுக்கினேன். அப்போதே என்னுடைய இடது கை மற்றும் கால் அசையத் துவங்கின.

என்னை சுகமாக்கிய தேவனுக்கு நான் எல்லா நன்றிகளையும் மகிமையும் செலுத்துகிறேன். மேலும் எனக்காக ஜெபித்த தலைமை போதகர் அறிவர். லீ அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். ஹலேலூயா.




வயோதிபம் தவிர, பெருமூளை நசிவுறலின் எந்த ஒரு அடையாளமும் இல்லை




### ❖ வல்லமையின் கைக்குட்டை

அப்போஸ்தலருடைய நடபடிகள் 19:11–12ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகள் இன்றும் கூட, உலகம் முழுவதிலும் நடைபெறுகின்றன. மான்மின் போதகர்களும், திருச்சபை பணியாளர்களும் வல்லமையின் கைக்குட்டையை வைத்து மக்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களது பல்வேறு வகையான வியாதிகளும் பெலவீனங்களும் சொஸ்தமாயின; இயல்பு நிலை திரும்பின. அவர்கள் தங்கள் ஜெபத்திற்கான பதிலையும் பெற்றனர். இப்பேற்பட்ட கிரியைகள் வேதாகமத்தின் நிஜரூபத்தை நிரூபித்து தேவனுக்கு மகிமை செலுத்துகின்றன.

## "நான் எனது இரண்டு செவிகளாலும் கேட்கலாயினேன்"

*கண்காணியை நாக்ஜிமா கிஹோர, வயது 71, லிடா மான்மின் திருச்சபை, ஜப்பான்*



நவம்பர் 2015ல், எனக்கு காது வலி இருந்தது. எனது காதுகளிலிருந்து சீழ் உருவாயின. எனது கேட்கும் திறன் மோசமாகியது. மருத்துவமனை எனக்கு இடைச் செவியழற்சி ஊடகம் உள்ளது எனக் கூறியது. எனது செவிகளிலிருந்து சீழை அகற்றிய மருத்துவ சிகிச்சையை பெற்று, மருந்துகளை உட்கொண்டேன். இருப்பினும், என்னால் சரியாக கேட்க முடியவில்லை. ஆராதனை நேரங்களில் என்னால் பிரசங்கங்களைச் சரியாக புரிந்துக்கொள்ள முடியவில்லை. நான் வருத்தமடைந்து துக்கப்பட்டேன்.

"ஏன் எனக்கு இவ்விதமாக நடக்கிறது" என நினைத்து நான் என்னை ஆராய்ந்து பார்க்க துவங்கினேன். நான் காலை உணவு உபவாச ஜெபம் ஏறெடுக்க, நான் எனது மகளுடன் சமாதானத்தைக் காத்துக்கொள்ளவில்லை என்றும், எனது பெற்றோர்களுக்கு நான் செய்த தவறு ஆகியவை என் மனத்திரையில் ஓட அதையும் உணர்ந்தேன். நான் பாவ அறிக்கைச் செய்து மனந்திரும்பி ஊக்கமாக ஜெபித்து, போதகர் செங்கியுல் ரியு அவர்களிடம் கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றேன் (அப்போஸ்தலர் 19:11–12). அதன்பின் நான் சிறிது சிறிதாக கேட்க துவங்கினேன்.

பிப்ரவரி 27 அன்று, உயர்திரு. ஹீசன் லீ, மான்மின் உலகளாவிய வழிநடத்தும் போதகர் 22வது ஆண்டுவிழாவை நடத்தும்படி எனது சபைக்கு வந்தார்கள். நான் அவர்களது கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றேன். அச்சமயம் எனது செவிகளிலிருந்து ஏதோ வெளியே வருவது போல உணர்ந்தேன். எனது இரண்டு செவிகளாலும் நான் நன்கு கேட்கலாயினேன்.

நான் புதிய உலகத்தில் வாழ்வது போல உணருகிறேன், ஹலேலூயா! என்னை சுகமாக்கிய ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

## "நான் திருச்சபையில் பதிவு செய்த பிற்பாடு நீண்டகால தசைநடுக்க கோளாறிலிருந்து சுகம் பெற்றேன்"

*சகோதரர் பேட்ரிக் லெங்ஹியு அவரது மனைவியுடன், வயது 48, ஹேய்னாட் மான்மின் திருச்சபை, பெல்ஜியம்*



நான் குழந்தையாயிருந்ததில் இருந்து எனக்கு கடுமையான தசைநடுக்க கோளாறு (சுயவிருப்பமற்ற இயக்கக்கோளாறு) இருந்தது. அது மோசமாகும்போது, எனது தோள்பட்டை இறங்கி, ஒவ்வொரு சில நொடி களுக்கும் என் தலையை குலுக்குவேன்.

நான் சிறுவனாய் இருந்தபோது, சில சமயம் அறிகுறிகள் மிகவும் மோசமாயின. அது மோசமாக மோசமாக, நான் தூக்கத்திற்காக படுக்கையில் கட்டப்பட்டிருக்க வேண்டியிருந்தது. நான் பல மருத்துவ சிகிச்சைகளை முயற்சித்தேன். மருந்துகளையும் உட்கொண்டும் ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை. நான் ஆரம்ப பள்ளிக்குள் நுழைந்தபோது மருந்து உட்கொள்வதை நிறுத்திவிட்டேன். அப்பொழுதிலிருந்து, 40 ஆண்டுகளுக்கும் மேலாக நான் நீண்டகால தசைநடுக்க கோளாறுடன் வாழ்ந்தேன். அதன் காரணத்தால், எனக்கு தன்னம்பிக்கை இல்லாதிருந்தது, பிறர் முன்பாக அசௌகரியமாகவும் உணர்ந்தேன்.

பிப்ரவரி 2014ல், தெருவில் சுவிசேஷம் பிரசங்கித்த திருச்சபை அங்கத்தினர் ஒருவரால் நான் ஹேய்னாட் மான்மின் திருச்சபைக்கு வழிநடத்தப்பட்டேன். நான் தேவனுடைய வார்த்தையைக் கற்று, பல வகையான வியாதிகளை சுகமாக்கின தேவனுடைய கிரியைகள் பலவற்றைக் குறித்து கேள்விப்பட்டேன். இப்படிச் செய்கையில், நான் சுகம் அடைவேன் என்ற விசுவாசம் எனக்கு அருளப்பட்டது. செய்திகளின் மூலமாக நான் என்னை கண்டறிந்து, தானியேல் ஜெபக் கூடுகையில் ஜெபிக்க முயற்சிக்கத் தொடங்கினேன். நான் எனது குடும்பத்திற்கு விரோதமாக மனஸ்தாபம் கொண்டிருந்ததைக் கண்டறிந்து அதை முற்றிலுமாக அறிக்கைச் செய்து மனந்திரும்பினேன்.

பிப்ரவரி 14, 2016 அன்று, திருச்சபையில் கைக்குட்டை சுகமாக்கும் கூட்டம் நடைபெற்றது. ஏக்கத்தோடு நான் பங்குப் பெற்று, போதகர். கிறிஸ்டினா ரோ அவர்களின் கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றபோது, அதிகமாக வேர்க்கத் தொடங்கினேன். எனது சரீரம் முழுவதும் ஈரமானது. அதன்பின், நான் எனது தலையையும், தோள்பட்டையையும் குலுக்குவதே இல்லை. இறுதியாக, என் வாழ்வு முழுவதும் நீண்டகால தசைநடுக்க கோளாறில் வாழவேண்டியிருந்த நான் சுகம் பெற்றேன். ஹலேலூயா!

# மான்கள் நீரோடையை வாஞ்சிப்பதுபோல, நான் பரிசுத்த வேதாகமத்தின்படி செயல்படும் ஒரு சபைக்காக வாஞ்சையாக இருந்தேன் !

**போதகர் யங்ரேன் பார்க், வயது 50, 3ம் மாகாணம், தென் கொரியா**

என் கல்லூரி நாட்களில் நான் தேவனைச் சந்தித்தேன். ஒரு நாள் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, நான் ஊழியங்களைச் செய்யும் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டேன். நான் அமெரிக்காவிற்குச் சென்று போதகர்களுக்கான இறையியல் முதுகலை பட்டயப் படிப்பை படித்து பெர்க்லேவில் உள்ள இறையியல் சங்கத்தில் பட்டம் பெற்றேன். நான் 2008ல் ஸ்தாபனம் சாராத ஒரு சபையில் போதகராய் நியமிக்கப்பட்டு, ஏழு வருடங்களாக என் ஊழியத்தைச் செய்தேன்.

நான் ஊழியத்தைச் செய்த சான்பிரான்சிஸ்கோ நகரமானது ஹிப்பி கலாச்சாரம் தோன்றிய இடமாகும். அந்த நகரத்தில் உள்ள சபைகள் அனைத்தும் மனிதவியல் மற்றும் மத பன்மைத் துவத்தால் பல பிரச்சனைகளைச் சந்தித்து வந்தன. அந்த நகரத்தில் ஓரினச்சேர்க்கையாளர்களுக்கென ஒரு இடமும் இருக்கிறது. ஆவிக்குரிய ரீதியில், அது கடுமையான போராட்ட களமாக உள்ளது. நாட்கள் ஓட நான் ஆவிக்குரிய தாகத்தைப் பெறலானேன்.

வேதாகமம் வல்லமையான கிரியைகள், அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் குறித்து நமக்கு விவரிக்கிறது. 'விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்' என்று வேதாகமம் சொல்லுகிற அற்புதங்கள் ஏன் இந்த நவீன உலகத்தில் வாழ்கின்ற எண்ணற்ற போதகர்களைப் பின்தொடருவதில்லை? நான் நினைத்துப் பார்த்தேன். ஆவிக்குரிய ரீதியில் இருளான காலக்கட்டத்தில் வாழ்வதைப் போல நான் உணர்ந்தேன்.

இதற்கிடையில், தற்செயலாக, நான் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய பிரசங்கங்களைப் பற்றி கேள்விப்பட்டேன். அவருடைய பிரசங்கங்–களை நான் கேட்டபோது, கண்ணீரோடு நான் மனந்திரும்பினேன்; நான் ஆவிக்குரிய ரீதியில் என் சரீரத்திலுள்ள அழுக்குகளை தேய்த்து அகற்றுவதைப் போன்று உணர்ந்து, புத்துணர்வை அடைந்தேன். 2013 டிசம்பர் முதற்கொண்டு, அவருடைய பிரசங்கங்களை நான் கேட்டு, அநுதினமும் மனந்திரும்பினேன். புரிந்துகொள்ள கடினமாக இருந்த வசனங்களைத் தெளிவாக விளக்கிய பிரசங்கங்களைக் கேட்டு நான் உற்சாகமடைந்தேன்.

மொத்தம் 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பங்குப் பெற்ற அறிவர். லீ அவர்களின் 2002 இந்திய ஒருங்கிணைந்த கூட்டத்தின் காணொளி காட்சிகளில் பரிசுத்த ஆவியானவரின் அக்கினிமயமான கிரியைகள் நடைபெற்ற நிகழ்வுகளை நான் பார்த்தபொழுது, பிரமித்துப் போனேன்.

ஒரு பிரசங்கத்தில், அறிவர். லீ தன்னுடைய மந்தைகள் நரகத்தில் விழுந்துவிடக் கூடாது என்பதற்காக தூங்காமல் கண்ணீரோடுகூட மிகுந்த நேரங்களை அவர் ஜெபிக்க செலவிடுவதைப் பற்றி சொன்னார். அதைக் கேட்டபொழுது, எவ்வளவாய் என் மந்தைகளை நான் நேசித்தேன் என்று எனக்குநானே கேட்டு, முற்றிலுமாக மனந்திரும்பினேன்.



தேவன்மீது, ஆத்துமாக்கள்மீது என்னுடைய அன்பு மிகவும் ஆழமானதாக மாறியது. தெளிவற்றதாக இருந்த புதிய எருசலேமிற்கான நம்பிக்கையானது மிகவும் தெளிவானதாகவும், பிரத்யேகமானதாகவும் மாறியது.

மேலும் போதர்களுக்குரிய முதல் பணி பரிசுத்தமான இருதயத்தை அடைவதும், மனித நேய சபை நிகழ்ச்சிகளிலிருந்து தங்களை தூரப்படுத்திக் கொள்வதும்தான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அப்பொழுதுதான் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் பெலனைப் பெற்று, வேதாகமத்தின் வழியில் இயேசு கிறிஸ்துவை பிரசங்கிக்க முடியும்.

ஆகவே, நான் வேறு எதைக்காட்டிலும் முதலாவது பரிசுத்தத்தை அடையவேண்டும் என்று தீர்மானித்தேன். 2015 பிப்ரவரியில் என் ஓய்வின் ஆண்டில், நான் என் கணவர் மிஷனரி தேஹியுன் க்யங் உடன் கொரியாவிற்கு வந்தேன். தேவ வல்லமையின் ஆச்சரிய கிரியைகளை நான் கண்டு, அனுபவித்தேன். தேவனுடைய வார்த்தையாலும், ஜெபத்தாலும் ஆவிக்குரிய நிலையை புதுப்பித்துக் கொண்டேன். இப்பொழுது தேவனுடைய பார்வையில் ஒரு உகந்த பாத்திரமாக மாறும்படி என்னை ஆயத்தப்படுத்துகிறேன்.

தெய்வீகத்தின் வல்லமையும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் நிறைந்துள்ள இந்த மான்மின் மத்திய திருச்சபைக்கு என்னை வழி நடத்திய தேவனுக்கு நான் சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன். ஹலேலூயா!



2015 ஜனவரியில், நான் வேலை செய்து கொண்டிருந்த பொழுது எனக்கு கொடிய வலி உண்டானது. நான் மருத்துவமனைக்குச் சென்று எக்ஸ்ரே மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேனை எடுத்தேன். பரிசோதனை முடிவில் என் சரீரத்தில் உள்ள முதுகு தட்டில் வீக்கம் இருப்பது தெரியவந்தது. அது என் தசைகள் மற்றும் எலும்புகளில் பிரச்சனைகளை உண்டாக்கியது.

நான் என் சிறுபிராயத்திலிருந்து மான்மின் அங்கத்தினராக இருப்பதினால், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களால் நிகழ்த்தப்பட்ட எண்ணற்ற சுகமான கிரியைகளை நான் கண்ணாரப் பார்த்திருக்கிறேன். ஒரு முறை என் வலது கணுக்காலில் முறிந்த மோசமான பகுதிகள், அவருடைய ஜெபத்தை நான் பெற்ற பிறகு, நன்றாக அவைகள் இணைக்கப்பட்டன. ஆதலால், இந்த முறை நான் கவலைப்படவில்லை; இந்த வியாதியும் நன்றாகிவிடும் என்று நினைத்தேன்.

ஆனால் விநோதமான அறிகுறிகள் என்னில் தோன்ற ஆரம்பித்தன. ஏப்ரல் மாதம் முதல் வேகமாய் நான் எடைகளை இழந்தேன், கடுமையான தூக்க கோளாறும் ஏற்பட்டது. என் முகம் மஞ்சள் நிறமானது; என் முதுகு வலி மிகவும் மோசமானது. என் வயிறு பெரிதாய் வீங்கிக் கொண்டே போனது, என் அடிவயிற்றில் வலி உண்டானது.

# "என் உயிருக்கு ஆபத்தான நிலைக்கு என்னை கொண்டுச் சென்ற இடுப்புத்தசை கட்டியிலிருந்து நான் சுகமானேன்"

**கண்காணி ச்சங்கியோன் ஹான், வயது 37, 1வது மாகாணம், தென்கொரியா**


2015, நவம்பர் 25ல், என்னுடைய மேல் இடுப்புத் தசைகளில் கட்டி இருப்பதாக கண்டறியப்பட்டது. என்னுடைய மருத்துவர் என் அடிவயிற்றின் வலதுபுறத்தில் எண்ண முடியாத அளவிற்கு கட்டிகள் இருக்கிறது என்றார். அது என் முதுகு தட்டில் பிரச்சனைகளை உண்டாக்கியதால், என் முதுகு எலும்பை சுற்றியிருந்த தசைகள் உருகின. எனக்குள் இருக்கும் கட்டிகளை உடனடியாக அகற்றாவிட்டால், அவைகள் வெடித்து, வயிற்று உள்ளறையில் அழற்சிகள் உருவாகக் காரணமாகிவிடும் என்று மருத்துவர் சொன்னார். மேலும் அவர் அந்தக் கட்டிகள் அதிகமாக இருப்பதால் என் உயிருக்கே ஆபத்தாகிவிடும் என்றும் கூறினார்.

பயப்படுவதைக் காட்டிலும் நான் அதிகமாய் நன்றியை உணர்ந்தேன்; என் கிறிஸ்தவ வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்க துவங்கினேன். என் வலது அடிவயிற்றுப் பகுதியில் இருந்து கட்டிகளை அகற்றும்படி நான் அறுவைச் சிகிச்சையை பெற்றேன். அதன் அளவு 100 CC முதல் 500 CC என ஒரு நாளைக்கு அகற்றப்பட்டது. இந்த முறையில் தொடர்ச்சியாக எட்டு நாளைக்கு நான் உட்படுத்தப்பட்டேன், ஏறக்குறைய 1800 CC அளவுடைய கட்டிகள் அகற்றப்பட்டன. மூன்று நாளைக்குப் பிறகு மீண்டும் நான் சி.டி ஸ்கேன் எடுத்தேன். என் வலது இடுப்புத்தசையில் இருந்த கட்டிகள் பெரும்பாலும் நீங்கிப்போயின, ஆனால் இடது புறத்தில் இன்னும் கட்டிகள் அப்படியே இருந்தன. இரண்டு நாளுக்குப் பிறகு மீதியாக உள்ள கட்டிகளை அகற்ற வரும்படி மருத்துவர் என்னிடம் கூறினார்.

நவம்பர் 29ல், தேவனுடைய வார்த்தையின் மூலமாக, நான் என் விசுவாச வாழ்க்கையில் புதிதாகும்படி தேவன் விரும்புகிறார் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்; அவருடைய அன்பையும் உணர்ந்தேன். என் வாஞ்சை தணிந்துப் போனதற்காக நான் கண்ணீரோடு மனந்திரும்பினேன். மேலும் நான் ஒரு முழு நேர பணியாளராக உண்மையாக வேலை செய்கிறேன் என்று நினைத்த பொழுதும் எனக்குள் மாறுகிற இருதயம் இருந்தது. நான் மான்மின் ஜெபமையத்தின் தலைவர் போக்னிம் லீ அவர்களுடைய கைக்குட்டை ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன் (அப். 19:11–12).



ஜெபத்திற்கு முன்: இடுப்புத்தசையின் இருபுறமும் உள்ள 6-7 செ.மீ பெரிதான கட்டிகள்.



ஜெபத்திற்குப் பின்: கட்டிகளே இல்லை

அடுத்தநாள், இடது இடுப்புத்தசையில் இருந்த கட்டிகளை நீக்கும் அறுவைச் சிகிச்சையை பெறும்படி நான் மருத்துவ மனைக்குச் சென்றேன், ஆனால் எதுவும் வெளியே வரவில்லை.

என்னுடைய மருத்துவர் ஏதோ தவறு நடந்துவிட்டது என்று கூறினார். டிசம்பர் 3 அன்று, நான் எக்ஸ்ரே, சி.டி ஸ்கேனை எடுத்தேன். பரிசோதனையின் முடிவைப் பார்த்த மருத்துவர் தன் தலையை குலுக்கியவாறு, "எப்படி ஒரு கட்டிக்கூட இருக்கவில்லை?" என்று சொன்னார். கைக்குட்டை ஜெபத்தினால் நான் இடுப்புத்தசையில் இருந்த கட்டிகளிலிருந்து முற்றிலும் சுகமானேன். அதன்பிறகு, நான் சீக்கிரமே புதிதாகி, எடையைப் பெற்றேன். இப்பொழுது நான் மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். ஹலேலூயா!

இந்த விலையேறப்பெற்ற திருச்சபையில் என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையை நான் வாழ்வது ஒரு உண்மையான ஆசீர்வாதமாகும். நான் புதிதாகும்படி எனக்காக காத்திருந்து, என்னுடைய எல்லா வியாதிகளிலிருந்தும் என்னை குணமாக்கிய தேவனுக்கு நான் சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com